மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருச்சுழி.

அசல் வழக்கு எண்.247/2021

வாதி/பிரதிவாதி சாட்சியின் வாக்குமூலம் (1873 ம் ஆண்டு சாட்சியச்சட்டம் 44 வது பிரிவு 5 ஆவது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.R.கலைச்செல்வி, கிரேடு III என்பவரால் ஆணையிட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் : முத்துராமலிங்கம் (வா.சா.3) | சாதி : |
| த/பெ.க/பெ : மாயாண்டி | மதம் : |
| கிராமம் : | தொழில் : |
| தாலுகா : | வயது : |

17.04.2024

வாதி தரப்பு சாட்சி 3 மீண்டும் அழைத்ததின் பேரில் 1,2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்குவிசாரணை –

1. நான் 8 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு எழுதப்படிக்க தெரியும். தாவா சொத்து பற்றியும் வழக்கு பற்றியும் எனக்கு தெரியும். நான் விவசாயம் செய்து வருகிறேன். நான் நாயனேந்தல் கிராமத்தைச் சேர்ந்தவன். கிராம பொதுமக்கள் சாட்சியம் அளிக்க சொன்னார்கள் ராதாகிருஷ்ணன் அழைத்தார். சாட்சியம் அளிப்பதற்கு அழைப்பாணை வரவில்லை. ராஜேந்திரன் மீது ராஜமோகனும் அவரது தம்பியும் தாக்கல் செய்துள்ளார்கள். பொது இடம் வாதிகளுக்கு வேண்டும் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். தாவா இடத்தின் பட்டா, சர்வே எண் , நான்குமால், விஸ்தீரணம் தெரியாது. தாவா சொத்து யார் பெயரிலும் இல்லை.

2. தாவா சொத்திற்கு தெற்கு கடைசியில் எனது வீடு உள்ளது. தாவா சொத்திற்கும் எனது வீட்டிற்கும் 150 மீ தொலைவு உள்ளது. வாதிகளுக்கு நான் எழுத்து மூலம் அதிகாரம் கொடுக்கவில்லை. கிராம பொது மக்கள் கொடுத்தார்கள். எழுத்து பூர்வமான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. எனக்கு 2 மகன்கள் உள்ளார்கள். திருமணம் முடியவில்லை. தாவா சொத்தில் நான் விசேசங்கள் நடத்தவில்லை. கிராம மக்கள் நடத்திய விசேசங்களுக்கு அடங்கிய புகைப்படங்கள் தாக்கல் செய்யவில்லை. வழக்கின் பிரதிவாதிகள் நாயனேந்தல் கிராமத்தைசேர்ந்தவர்கள் என்றால் சரிதான். 1, 2 பிரதிவாதிகள் 20 லட்சத்திற்குள் மேல் சொத்துக்கள் வைத்துள்ளார்கள் மற்றும் அரசு துறையில் வேலை பார்ப்பதாக சொல்லி சங்கதிகளுக்கு ஆதரவாக ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. 2 ம் பிரதிவாதி ரயில்வே துறையில் மானாமதுரையில் முதலில் பார்த்து வந்தார் தற்போது எங்கு

பார்க்கிறார் என்று எனக்கு தெரியாது. வழக்கு பற்றி விபரங்கள் எனக்கு தெரியாமல் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நிரூபண வாக்குமூலத்திற்கு சங்கதிகள் நானாக சொன்னேன். தாவா சொத்து பற்றியும் தாவா சொத்தின்அனுபவம் பற்றியும் எனக்கு தெரியாது என்றாலும் வாதிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு பற்றிய உண்மை விபரங்கள் தெரியாமல் சாட்சியம் அளிப்பதால் எனது சாட்சியம் ஏற்றுக்கொள்ளதக்கதல்ல என்றால் சரியல்ல. 1, 2 பிரதிவாதிகளின் அனுபவத்தை இடைஞ்சல் செய்யும் நோக்கத்தில் வாதிகள் வழக்கை தாக்கல் செய்து பிரச்சனை செய்து வருவதால் வாதிகளின் வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

**3 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை –**

3. நான் நாயனேந்தல் கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். வாதிகள் ராஜசேகர் எனது பங்காளி. ராதாகிருஷ்ணன் எனது தம்பி. எனக்கு 59 வயதாகிறது. தாவா சொத்தின் சர்வே எண் , விஸ்தீரணம் எனக்கு தெரியாது. ஒரே நெட்டாக உள்ளது. ஆரம்பம் முதல் தாவா சொத்து பொது இடமாக உள்ளது யாரும் அனுபவம் செய்யவில்லை. தாவா சொத்தின் மேற்கே வாதி இடம் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்திற்கு வடக்கே சிவசுப்பிரமணி வீடு உள்ளது. சிவசுப்பிரமணி வாதி ராஜசேகருக்கு சித்தப்பா உறவுமுறை. தாவா சொத்து வாதிக்கும், பிரதிவாதிக்கும் சொந்தம் கிடையாது. செல்வம் வகையறாவோ, ராஜசேகரோ பொது மக்கள் பயன்படுத்துவதற்கு இடைஞ்சல் செய்கிறார்களா என்றால் ராஜமோகன் இடையூறு செய்கிறார். பட்டா கேட்டுள்ளார். 1, 2 பிரதிவாதிகள் தாவா சொத்திற்கு பட்டா கேட்கவில்லை என்றாலும் தற்போது வரை பொது மக்கள் பயன்பாட்டில் அரசு புறம்போக்கு இடமாக இருந்து வருகிறது என்றால் சரியல்ல. தாவா இடத்திற்கு அருகில் வாதி ராஜசேகரும், அவரது சித்தப்பா சிவசுப்பிரமணி இடம் இருப்பதால் தாவா சொத்தை அவர்கள் பயன்படுத்துவதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் கிராம பொதுமக்கள் வழக்கு தாக்கல் செய்தார்கள். கிராம மக்களுக்கிடையே வாதி ராமசுப்பிரமணி கலவரத்தை உண்டுபண்ணுகிறார் என்றால் சரியல்ல. அரசு தரப்பில் இருதரப்பினரையும் அழைத்து விசாரணை மேற்கொள்ளவில்லை. பிரதிவாதி பட்டா கேட்டு மனு செய்திருந்தால் கிராம பொதுமக்களைகேட்டு விசாரித்திருப்பார்கள் என்றாலும் 1, 2 பிரதிவாதிகள் பட்டா கேட்டு மனு தாக்கல் செய்யாததால் தான் கிராம

மக்களை அரசு விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. அரசு புறம்போக்கு இடம் கிராம பொது மக்களுக்கு சொந்தம் என்றாலும் வாதிகளுக்கு எவ்வித பாத்திய உரிமை இல்லை என்றால் சரிதான்.

மறு விசாரணை –

4.இல்லை